

நாங்கள் "சுவிசேஷ அக்கினி" என்ற பெயரில் ஜெப சுற்றறிக்கை பிரதி மாதம் ஒருமுறை வெளியிடுகிறோம். இது வேதகாமத்திற்குள் வைத்து தினமும் படித்து ஜெபிக்கிறதற்கு ஏதுவாக சிறிய அளவே இருக்கும். உங்களுக்கு இது தேவனோடு உறவாடுவதற்கு மிக பிரயோஜனமாகவும், ஜெபிக்க பழகவும் பிரயோஜனமாக இருக்கும். இந்த ஜெப சுற்றறிக்கை வேண்டுவோர் எங்கள் முகவரிக்கு தங்களுடைய விலாசத்தை எழுதி அனுப்பினால் நாங்கள் உங்களுக்கு தொடர்ந்து அனுப்பி வைப்போம்.

**எங்களுடைய வெளியீடுகள்**

1. பரம குயவனின் பாத்திரங்கள் (சிறுவர் ஊழிய கதைகள்)
2. பாவத்தின் கொடிய வலையும், அதிலிருந்து விடுதலையும்
3. நான் தேடும் மனிதன் நீ தான் - இயேசு
4. சின்னப்பூக்கள் (சிறுவர் பாடல்கள் ACD)
5. பரலோகத்தின் திறவுகோல்கள்


சகோ. A.பால்ராஜ்

**Gospel Missionary Prayer Fellowship**

**சுவிசேஷ மிஷினெரி ஜெப ஐக்கியம்**

5/110, சாமிபுரம் காலனி, சிவகாசி கிழக்கு - 626 189.
விருதுநகர் மாவட்டம், (த.நா) தென் இந்தியா
செல் : 94431 78673

*Web : www.gospelfellow.com*
*e-mail : gospelfellowsvks@gmail.com*


# ஜெபக் குறிப்புகள்

## 100



A.பால்ராஜ்

# ஜெபக் குறிப்புகள்

1. நம்முடைய தேசத்தில் ஜாதி துவேஷத்தை உண்டு பண்ணுகிற பிசாசின் ஆவிகளின் கிரியைகள் கட்டப்பட்டு பாதாளத்திற்குள் போக இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

2. மத துவேஷத்தையும், மதக்கலவரங் களையும் உண்டு பண்ணுகிற பிசாசின் கிரியைகள் கட்டப்பட்டு பாதாளத்திற்குள் போக ஜெபிப்போம்.

3. பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறதற்கு விரோதமாக ஆராதனை வேளைகளில், சபைகளில் பிரிவினை களைக் கொண்டு வரும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் இயேசுவின் நாமத்தில் கட்டப்பட்டு பாதாளத் திற்குள் போகும்படி ஜெபிப்போம்.

4. சபைகளில் தேவன் தமது சித்தத்தை நிறைவேற்ற பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்தத்தைக் கொண்டு வரவும், விசுவாசிகளுக்கு இயேசுவின் ஜெப ஆவியை ஊற்றும் படி ஜெபிப்போம்.

5. தேவ ஜனங்களுக்குள் கிரியை செய்கிற உலகத்தின் ஆவிகள் அவர்கள் மனதிலிருந்து விலகிப் போகவும், இயேசுவின் வருகையை எதிர்பார்த்து ஆயத்தப்படவும் ஜெபிப்போம்.

6. வட மாநிலங்களில் ஊழியம் செய்கிற மிஷினெரிகள் மற்றும் அவர்களுடைய பிள்ளைகள் பாதுகாக்கப்படவும் அங்குள்ள சபைகள் பாதுகாக்கப் படவும் ஜெபிப்போம்.

7. தேவனுடைய ஊழியர்கள் மற்றும் தேவனுடைய பிள்ளைகள் படிக்கிற

இடங்களிலும், பணி செய்யும் இடங்களிலும், வியாபாரம் செய்யும் இடங்களிலும், அவர்கள் வீடுகளிலும் பரிசுத்தம் காணப்பட இயேசுவின் இரத்தத்தைத் தெளித்து ஜெபிப்போம்.

8. அனைத்துத் தேசங்களிலும் ஓரினச் சேர்க்கைக்குப் பெருகி வருகிற ஆதரவு சாத்தானின் ஆவிகளின் செயல்பாடு என்று உணர்ந்து, இந்த ஆவிகள் தேசங்களை விட்டுப் பாதாளத்துக்குப் போக கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

9. தேவ ஊழியர்கள் மேல் விசேஷித்த அபிஷேகம் இறங்கவும், பரத்திலிருந்து விசேஷித்த வல்லமையைப் பெற்றுக்கொள்ளும் படி ஒவ்வொரு ஊழியர்களும் தங்களை கிறிஸ்துவின் பலிபீடத்தில் அர்ப்பணிக்கும் படி பரிசுத்த ஆவியானவர் நடத்த ஜெபிப்போம்.

10. அனைத்துத் தேசங்களிலும் சிறு பிள்ளைகள் இயேசு தான் உண்மையான கடவுள் என்பதையும், அவர் சிந்தின இரத்தம்தான் பாவத்தி லிருந்து ஒவ்வொருவரையும் விடுதலையாக்கும் என்ற உண்மையை அறியும் ஞானத்தை ஆவியானவர் சிறுவர்கள் மேல் ஊற்றும்படி ஜெபிப்போம்.

11. வாலிபர்களும், வாலிபப்பிள்ளை களும், பாவத்தைக் குறித்தும் அதனால் வரும் தண்டனையின் கொடூரமான சரீர வியாதி, சாபம், கைகளின் பிரயாசங்கள் அழிக்கப் படுதல், பிசாசு கொண்டுவரும் தரித்திரம், நித்திய நரகம் என்பதைக் குறித்த விழிப்புணர்வும் அதிலிருந்து தப்ப இயேசுவின் சிலுவைண்டை ஓடி வர ஜெபிப்போம்.

12. கர்த்தருடைய பிள்ளைகளின் வியாபாரம், படிப்பு, வேலைவாய்ப்பு, தொழில், குடும்ப சமாதானம் இவைகளில் தேவன் கிரியை செய்து ஆசீர்வதிக்க, திருமணத்தடைகள் நீங்க, கர்ப்பம் உண்டாகாதபடி தடைசெய்கிற சர்ப்பத்தின் கிரியைகள் அழிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

13. தேவ ஜனங்கள் வேத வசனத்தின் மேல் தாகமுண்டாகி, வாஞ்சையாய் ஒவ்வொரு நாளும் வேதாகமத்தைப் படித்து, சத்தியத்தை அறிந்து கொள்ள ஜெபிப்போம்.

14. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட தேவ ஜனங்கள் புறஜாதிகள் மத்தியில் சாட்சியுள்ளவர்களாகவும், ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவை வெளிப்படுத்து கிறவர்களாகவும் வாழ ஜெபிப்போம்.

15. கர்த்தருடைய பிள்ளைகளின் மத்தியில் கிரியை செய்கிற பெருமையின் ஆவிகள், பொறாமையின் ஆவிகள், வைராக்கியத்தின் ஆவிகள், பிரிவினையின் ஆவிகளின் கிரியைகள் இயேசுவின் நாமத்தில் கட்டப்பட்டு பாதாளத்துக்குப் போகும்படி கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

16. கள்ளப்போதனைகளும், கள்ளத் தீர்க்க தரிசனங்களும் பெருகி வரும் இந்நாட்களில் தேவபிள்ளைகள் வேத வசனத்தின் மூலம் அடையாளம் கண்டு விலகிக்கொள்ள பரிசுத்த ஆவியானவர் உதவி செய்யும்படி ஜெபிப்போம்.

17. தேவ பிள்ளைகளின் குடும்பங்களில் வாழ்வாதாரம் ஆசீர்வதிக்கும்படியும், ஆசீர்வாதத்துக்கு விரோதமாக போர் செய்கிற தரித்திரம், நஷ்டம், குழப்பம்,

குடும்பச்சண்டைகள் இவைகள் எல்லாம், பிசாசினால் வருகிறதென் பதை உணர்ந்து கிறிஸ்துவுடன் சிலுவையை சார்ந்து கொள்ள ஜெபிப்போம்.

18. கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று யோவேல் தீர்க்கதரிசி மூலமாக சொல்லப்பட்ட தேவ வார்த்தை எல்லாச் சபைகளிலும் நிறைவேறவும், தேவ ஜனங்கள் மத்தியில் அபிஷேகத்தை பெற வேண்டும் என்கிற தாகத்தையும் பரிசுத்த ஆவியானவர் ஏற்படுத்தவும் ஜெபிப்போம்.

19. தேவனுடைய ஊழியர்களையும், விசுவாசிகளையும் நிந்திக்கிற நபர்களைக் கர்த்தர் இரட்சிக்கவும், நிந்திக்கத் தூண்டுகிற பிசாசின் ஆவிகள் பாதாளத்துக்குப் போகவும்

இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

20. சிறு பிள்ளைகளை கடத்துகிற கும்பல்கள் குற்ற உணர்வுடன் மனம் திரும்பி இரட்சிக்கப்படவும், இவ்விதமாக கடத்தப்பட்ட பிள்ளைகளை காவல் துறையினர் கண்டுபிடித்து பிள்ளைகளின் குடும்பத்தில் அவர்களை ஒப்படைக்க கர்த்தர் பொறுப்பெடுக்கும்படி ஜெபிப்போம்.

21. தேவ பிள்ளைகள் ஞானத்தில் தேர்ச்சி உள்ளவர்களாய் கல்வியில் நல்ல மதிப்பெண்கள் பெற்று அரசு துறைகளில் உயர் பதவிகளைப் பெறவும், அதை தடைபண்ணுகிற ஆவிகள் பாதாளத்திற்குள் போகும்படி. இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

22. ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் உதடுகளிலிருந்து பொய் ஆவிகள் விலகவும், நாம் கர்த்தருக்கு முன்பாக பேசுகிறோம் என்பதை அவர்கள் உணரும்படி பரிசுத்த ஆவியானவர் உணர்த்தும்படி ஜெபிப்போம்.

23. வியாபாரத்தில் நஷ்டம், தொழிலில் கஷ்டம், குடும்பத்தில் கஷ்டம், படிப்பில் தோல்வி, இப்படி பல காரியங்களில் வாழ்க்கையில் வெறுப்படைந்தவர்களாய் இனி தற்கொலைதான் முடிவு என்று முடிவெடுக்கத் தூண்டுகின்ற தற்கொலையின் ஆவிகள் கட்டப்பட்டு பாதாளத்துக்குப் போகவும், பரிசுத்த ஆவியானவர் இவர்களை சிலுவையண்டை கொண்டு வரவும், அவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

24. தேவ பிள்ளைகள் நன்மையான எந்தக் காரியத்திற்கானாலும் கர்த்தரிடம் பொருத்தனை செய்திருந்தால் தேவன் தம்முடைய கிருபையினால் மனமிரங்கி நிறைவேற்றிக் கொடுக்கும் படி ஜெபிப்போம்.

25. குறிசொல்லுகிற ஆவிகள், பில்லிசூன்ய ஆவிகள். மாந்திரிகத்தின் மூலமாக ஏவப்படும் ஆவிகள் பாதாளத்துக்குப் போகவும், இதை செயல்படுத்துகிற மனிதர்கள் மனம்திருந்தி இரட்சிக்கபட ஜெபிப்போம்.

26. நம் அண்டை தேசங்களான பாகிஸ்தான், சீனா, வங்காளதேசம், இலங்கை மற்றும் இந்தியாவை சுற்றியுள்ள அனைத்து நாடுகளிலும் யுத்தமில்லாத சூழ்நிலைகளை அந்தந்த நாட்டின் தலைவர்கள்

உருவாக்கவும், எல்லா நாட்டு மக்களும் யுத்தத்தை வெறுக்கவும், சமாதானத்தை விரும்பவும் ஜெபிப்போம்.

27. வரும் நாட்களில் தேவ ஜனங்களை வழி நடத்த மோசேயைப் போல, யோசுவாவைப் போல, சாமுவேலைப் போல, தன்னலம் கருதாத இளம் ஊழியர்களைக் கர்த்தர் எழுப்பித் தரும்படி ஜெபிப்போம்.

28. குழந்தை பாக்கியம் இல்லாத தேவ ஊழியர்கள் மற்றும் தேவபிள்ளைகள் குடும்பத்தில் தேவன் கிரியை செய்து கர்ப்பத்தில் குழந்தையைச் சிருஷ்டிக்கவும் தேவசந்ததி பெருக தடைபண்ணுகிற ஆவிகளின் கிரியைகள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

29. எலியாவின் ஜெபத்தைக் கேட்டு மழை பெய்யச் செய்த கர்த்தர், தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்தையும் கேட்டு மழை பெய்யச்செய்து, நீர்நிலைகளான ஏரிகள், கிணறுகள், குளங்கள், ஆழ்துளை கிணறுகளிலும் தண்ணீர் நிரம்பச்செய்யவும், குடி தண்ணீருக்கு பஞ்சம் வராதபடி செய்யவும் விளை நிலங்கள் நன்றாக விளைந்து பலன் கொடுக்கவும் ஜெபிப்போம்.

30. தேவ பிள்ளைகள் கர்த்தருக்குச் சித்தமில்லாத காரியங்களில் தலையிடாதபடியும், பொல்லாதவர்கள் கூறும் ஆலோசனைகளை உதறித்தள்ளவும், விவேகமாய் நடந்து தப்பித்துக் கொள்ளும்படி ஜெபிப்போம்.

31. தேவ பிள்ளைகள் பாவத்துக்கு இடம் கொடாதபடி தங்களை காத்துக் கொள்ளவும், பொருளாசைகளுக்கு

விலகவும், கண்களின் இச்சைகளுக்கு தப்பவும், சாத்தான் மூலமாய் இருதயத்தில் உருவாகும் பெருமையினால் விழுந்துபோகாத படியும் ஜெபிப்போம்.

32. ஆவிக்குரிய ஐக்கியத்தைக் கெடுக்கிற சாத்தானின் தந்திரங்களைத் தேவ பிள்ளைகள் அறிந்து, தப்பித்துக் கொள்ள பரிசுத்த ஆவியானவரை சார்ந்து கொள்ள ஜெபிப்போம்.

33. ஊழியங்களில் சுய நலமாய் செயல்படத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்படவும், பொறாமையை தூண்டுகிற ஆவிகள் கட்டப் படவும், பகையை தூண்டுகிற ஆவிகள் கட்டப்படவும், ஏற்றத் தாழ்வை உண்டுபண்ணுகிற ஆவிகள் கட்டப்பட்டு பாதாளத்துக்குப் போகவும் இயேசுவின் நாமத்தில் கட்டளை

கொடுத்து ஜெபிப்போம்.

34. தேவ பிள்ளைகளின் கூடுகைகளில் பரிசுத்த ஆவியானவரால் ஏற்படுத்தப் பட்ட தேவ பிள்ளைகள் விருப்பத்தோடு கூடி வரவும், அந்த இடம் தேவ பிள்ளைகள் ஒரு மனிதனிடம் பேசுவது போல தேவனிடம் பேசுகிற இடம் என்று நினைத்து வரவும், இவைகளை உணர்ந்து, பயந்து, நேசித்து வரும்படி ஜெபிப்போம்.

35. கிறிஸ்துமஸ் தினத்தில் கர்த்தருடைய ஊழியர்களின் தேவைகள் சந்திக்கப் படவும், கர்த்தருடைய பிள்ளைகளின் குடும்பங்களில் சமாதானம் நிலவவும், தேவைக்கு மேல் கடன் வாங்கிக் கொள்ளாதபடி ஞானமாய் நடந்து கொள்ளவும் ஜெபிப்போம்.

36. கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் புத்தாண்டு தினம் கர்த்தருடைய

பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக இருக்கவும், குடும்பங்களில் இருக்கும் மனக்கசப்பு, பகை விரோதங்கள் நீக்கப்படவும், சமாதானத்தினால் பரிசுத்த ஆவியானவர் குடும்பங் களைக் கட்டவும் ஜெபிப்போம்.

37. கர்த்தருடைய பிள்ளைகளை பாதிக்கிற பணப்பிரச்சினை, குடும்ப பிரச்சினை, கடன் பிரச்சினை, எதிர்கால பிரச்சினை, வேலை வாய்ப்பு இவைகளினால் பாதிக்கப்பட்டு தேவ அன்பு குறைந்து போய் இருக்கிற ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் திடப்பட்டு மீண்டும் எழும்ப பரிசுத்த ஆவியானவர் உதவி செய்யும் படி ஜெபிப்போம்.

38. வடகொரியா தேசத்தில் கிறிஸ்தவர் களுக்கு விரோதமாக கிரியை செய்கிற வானமண்டல பொல்லாத ஆவிகள்

கட்டப்பட்டு பாதாளத்துக்குப்போகவும், அங்குள்ள தேவபிள்ளைகள் சுதந்திரமாக தேவனை ஆராதிக்க பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யவும், ஆட்சியாளர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

39. ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மனித உயிர்களை மிருகங்களை வேட்டை ஆடுவது போல கொல்வது தவறு என்று உணர்ந்து மனம்திரும்பி இரட்சிக்கப்பட்டு பொது வாழ்வுக்கு திரும்ப ஜெபிப்போம்.

40. பாவத்தினால் வரும் தண்டனையான சாபத்தினால் உண்டாகும் பரம்பரை நோய்களிலிருந்து விடுதலை பெற வியாதியஸ்தர்கள் இயேசுவண்டை வந்து அற்புதத்தைப் பெறவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

41. பரிசுத்த ஆவியானவர் அடிக்கடி கடிந்து கொண்டு சிட்சித்து வந்தாலும், தொடர்ந்து பாவத்தில் நிலை கொண்டிருக்கும் ஊழியர்களானாலும், சபை மக்களானாலும், சீக்கிரத்தில் மனம் திரும்பி கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக ஒப்புக் கொடுத்து ஜெபிப்போம்.

42. தேவ பிள்ளைகளின் குடும்பங்களில் ஒற்றுமையாக வாழ விடாதபடி, தாய் தகப்பனார் மற்றும் குடும்பத்தில் உள்ள மற்ற நபர்கள் மற்றும் நண்பர் களுக்குள் இருந்து கிரியை செய்கிற பிரிவினை ஆவிகள் இயேசுவின் நாமத்தில் பாதாளத்துக்குப் போகும்படி கட்டளை கொடுத்தும், தேவன் திருமணத்தில் இணைத்த தேவ பிள்ளைகள், பிரிவினைகளை தூண்டுகிற ஆலோசனைகளை

உதறிதள்ளி விட்டு, ஒற்றுமையாக வாழத் தீர்மானம் எடுக்கவும் ஜெபிப்போம்.

43. அனைத்து மக்களும், மழையைப் பற்றியோ, பூகம்பத்தைப் பற்றியோ, புயலைப் பற்றியோ, பஞ்சத்தைப் பற்றியோ, மனிதன் அறிகிற அறிவு குறைவு உள்ளது என்று உணர்ந்து, தேவனுடைய பாதுகாப்புக்குள் தங்களையும் தங்கள் குடும்பங் களையும், உடைமைகளையும் அனுதினமும் ஒப்படைத்து பாதுகாத்துக் கொள்ள விழிப்பாயிருக்கும்படி ஜெபிப்போம்.

44. பணமோ, பதவியோ, படிப்போ, செல்வாக்கோ சடிதியாய் வரும் ஆபத்து களிலிருந்து காப்பாற்றாது என்று உணர்ந்து தேவனின் பாதுகாப்புக்குள் ஒவ்வொருவரும் வரும்படியும், இயேசு

கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.

45. ஒவ்வொரு ஆண்டும் தேவ பிள்ளை களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கும் படியும், கிறிஸ்துவுக்குள் வாழ புதிய தீர்மானங்கள் எடுத்து தங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும், பரிசுத்தம், அன்பு, உண்மை, சமாதானம், சகோதரத்துவம், எல்லாவற்றுக்கும் இயேசுவைச் சார்ந்து கொள்ளுதல், இப்படி கிறிஸ்துவுக்குள் புதிய உடன்படிக்கை செய்து, இந்த ஆண்டு புதிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி ஜெபிப்போம்.

46. ஒவ்வொரு ஆண்டும் சபைகளிலும், ஜெபக்குழுக்களிலும் ஆத்துமாக்கள் அதிகமாக பெருகவும், ஊழியர்கள் அதற்கு ஆயத்தமாகவும், இயேசு செய்த அற்புத அடையாளங்கள்

புறஜாதி மக்கள் மத்தியில் வெளியரங்கமாக செய்யப்படவும், பரிசுத்த ஆவியானவர் ஊழியர் களையும், விசுவாசிகளையும் உற்சாகப்படுத்தி எழுப்பும்படி ஜெபிப்போம்.

47. தேவ பிள்ளைகள் இனி காலம் செல்லாது என்று உணர்ந்து இயேசுவின் இரத்தத்தினால் அனுதினமும் தங்களைச் சுத்திகரித்து, இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகும்படி ஜெபிப்போம்.

48. சுவிஷேசத்தைச் சொல்லுவதற்கு பயப்படாமலும், வெட்கப்படாமலும், தைரியமாய் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் ஊழியர்களுக்கு தேவ வல்லமையை அதிகமாய் அருளும்படி ஜெபிப்போம்.

49. சுவிஷேசத்திற்கு எதிராய் செயல்படும்

மனிதர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டாகவும், அவர்களை இயக்குகிற பிசாசின் ஆவிகள் பாதாளத்துக்குப் போகும்படி கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

50. சபைகளுக்குள்ளே கருத்து வேறுபாடு நீக்கப்படும்படியாகவும், ஒரு மனது உண்டாகவும், ஆவியானவரின் பெருமழைக்கு ஆயத்தமாகவும், ஒத்த கருத்துடன் இயேசுவின் வருகைக்கு எதிர்பார்க்குதல் உண்டாக ஜெபிப்போம்.

51. தேவ பிள்ளைகள் கொடுக்கும் காணிக்கைகள் ஊழியத்தில் சரியான விதத்தில் பயன்படுத்தப்படவும், அதன் பலன்களை அவர்கள் பெற்று அனுபவிக்கும்படி தேவன் அனுக்கிரகம் பண்ணும்படி ஜெபிப்போம்.

52. தேவனுடைய பிள்ளைகள் உலகப்

பிரகாரமான பண்டிகை நாட்களில் தங்களை வேறு பிரித்துக்கொண்டு நடந்து கொள்ளவும், மனதில் வேறு பிரித்தலின் நிச்சயம் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு தைரியத்தைக் கொடுக்கும்படி ஜெபிப்போம்.

53. மிஷினெரிப் பணி செய்கிறவர்களுக்குக் கர்த்தர் தேவைகளைக் குறைவின்றி அருளவும், அவர்களின் பிள்ளை களின் படிப்பு, எதிர்காலத்தைக் குறித்த பயத்தில் கர்த்தர் அவர்களுக்கு தைரியத்தைக் கொடுக்கவும், உற்சாகமாய் அவர்கள் ஊழியம் செய்யும்படி ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

54. பண ஆசையினாலும், வறுமை யினாலும், விபாசார தொழிலில்

ஈடுபடும் பெண்கள் இரட்சிக்கப்படும்படி ஜெபிப்போம்.

55. தேவனுடைய பிள்ளைகளின் வியாபாரம், தொழில், படிப்பு, வேலை, இவைகள் ஆசீர்வாதம் பெறக்கூடாதபடி போராடுகிற தீய ஆவிகள் பாதாளத்துக்குப் போகும்படி கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

56. இந்திய தேசத்தில் மத வெறியின் ஆவிகள், மதவாதிகள் துண்டிவிட்டு இந்திய மக்களிடையே பிளவுகளை உண்டுபண்ணுகிற தீய ஆவிகள் பாதாளத்துக்குப் போகும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

57. இயேசுவை நம்பி ஊழியம் செய்கிற உண்மையானவர்களுடைய தேவைகளை, அவர்களுடைய ஜெபங்களைக் கேட்டு எல்லா

தேவைகளிலும் கர்த்தருடைய கரம் கூடவே இருந்து பூர்த்தி செய்யும்படி ஜெபிப்போம்.

58. இந்திய தேசத்தில் மதக்கலவரம் வராதபடி நாம் இந்தியர்கள் என்கிற ஒருமையின் சிந்தனை உருவாக பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு இந்தியர்களின் இதயத்திலும், சமாதானமும், ஒற்றுமையும் உண்டாக்கும்படி ஜெபிப்போம்.

59. உழியத்தில் வல்லமையாய் பயன் படுத்தப்பட்டு தற்சமயம் பின்வாங்கிப் போன விசுவாசிகளும், உழியர்களும் இன்ன நிலைமையில் விழுந்தோம் என்று உணர்ந்து தங்களை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள சிலுவையின் அடியில் வர ஜெபிப்போம்.

60. அதிகமான வெப்பமுள்ள இந்த நாட்களில் உஷ்ணத்தின்

காரணத்தினால் பரவும் நோய் களிலிருந்து தேவன் தம்முடைய பிள்ளைகளின் சரீரங்களைப் பாதுகாக்கவும், வெப்பம் தணியும்படி, மழை பெய்யச் செய்யும்படி ஜெபிப்போம்.

61. நம் தேச தலைவர்கள் ஜாதி மோதல்களையும், மத சம்பந்தமான மோதல்களையும், ஊக்குவிக்காதபடி அதற்கு முற்றுப்புள்ளி வைத்து சமாதானத்துக்கேற்றவைகளைப் பேச பரிசுத்த ஆவியானவர் அவர்களின் இருதயத்தை நிரப்ப ஜெபிப்போம்.

62. தேவனுடைய பிள்ளைகளும், கர்த்தருடைய ஊழியர்களும் பொல்லாங்காய்க் கிடக்கிற இந்த உலகத்திலே கிறிஸ்துவை வெளிப்படுத்திக்காட்டும்படி ஒப்புக் கொடுத்து ஜெபிப்போம்.

63. வெப்பக்காலத்தில் சிறுபிள்ளைகளையும், முதியவர்களையும், பாதிக்கும் எந்த நோய்களும் கர்த்தருடைய பிள்ளைகளைப் பாதிக்காதபடி தேவன் பாதுகாக்கும்படி ஜெபிப்போம்.

64. ஜெபிக்கிற ஒவ்வொரு தேவபிள்ளைகளின் இருதயத்திலும், இன்ன காரியத்துக்கு ஜெபிக்க வேண்டும் என்ற விருப்பங்களை ஆவியானவர் ஜெபிக்கிறவர்களின் நாவில் வைத்து ஜெபிக்கும்படி நடத்த ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

65. VBS ஊழியங்களுக்கு ஆயத்தப்படும் தேவ ஊழியர்கள், சிலுவையின் அடியில் தங்களை தற் பரிசோதனை செய்து தங்களை கிறிஸ்துவுக்குள் பெலப்படுத்திக்கொள்ளவும். பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையின்படி ஊழிய நாட்கள் முழுவதும் தேவ

பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள தேவ சமூகத்தில் தங்களை அர்ப்பணிக்கும் படியும், எதிர்ப்பாளர்கள் சிதறடிக்கப்பட்டு முடக்கப்படும்படியும் ஜெபிப்போம்.

66. புற ஜாதிகள் மத்தியில் இயேசு இலவசமாய் கொடுக்கும் இரட்சிப்பைப் பெற விருப்பங்கள் அதிகரிக்கவும், இயேசுவே சிருஷ்டிப்பின் தேவன் என்பதை அறியும்படி புறஜாதிகளின் மனக்கண்கள் திறக்கப்படவும், பாவத்திலிருந்து விடுதலை செய்ய பூமிக்கு வந்த பரிகாரி அவர் தான் என்பதை உணர்ந்து சிலுவையின் அண்டை வரவும் ஜெபிப்போம்.

67. உலகம், மாமிசம், பிசாசின் கோட்டை களை நொறுக்கி, திறப்புகள் உண்டாக்க பரிசுத்த ஆவியின் வல்லமை பூமியிலே பலமாய் இறங்கும்படி, தானி 2:34-ன் படி

“ . . . .கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப் போட்டது” என்ற வேத வசனம் பூமியிலே ஒவ்வொரு மனிதன் மேலும் நிறைவேற ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

68. தேவனுடைய பிள்ளைகள் மற்றும் ஊழியர்கள் மனித புகழ்ச்சிக்கும், பணத்துக்கும் அடிமையாகாதபடி விசுவாசத்துடன் கிறிஸ்துவைச் சார்ந்து கொண்டு தைரியமாய் நிற்க, பரிசுத்த ஆவியானவர் பெலப்படுத்தும்படி ஜெபிப்போம்.

69. கிறிஸ்தவ சபைகளுக்குள் பரிசுத்தம் உண்டாகும்படி விசுவாசத்தின் மூலம்

இயேசுவின் இரத்தத்தைத் தெளித்து ஜெபிப்போம்.

70. கர்த்தருடைய பிள்ளைகளின் ஜெபத்திற்கு உடனே பதில் கிடைக்காத தினால் மனம் சோர்ந்து போய் வேதம் வாசிக்க முடியாமல், ஜெபிக்க முடியாமல் கிறிஸ்துவின் அன்பைவிட்டு விலகி நிற்கிறவர்களைப் பரிசுத்த ஆவியானவர் ஆற்றித்தேற்றி பெலப்படுத்தும்படி ஜெபிப்போம்.

71. ஜெபிக்கிற பிள்ளைகளுக்கு விரோதமாக ஜெபிக்க முடியாதபடி அதிகமான வேலைப்பளுவும், மனதில் சமாதானமின்மையும், தொழில் மற்றும் வியாபாரங்களில் போட்டி உருவாக்கி, குழப்பத்தை ஏற்படுத்துகிற பிசாசின் ஆவிகள் பாதாளத்துக்குச் செல்லும் படி இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

72. பரிசுத்த ஆவியானவர் உணர்த்தின பின்பும் கர்த்தருடைய பிள்ளைகள் தன் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டு பொய் பேசுவது, மிகைப்படுத்தி பேசுவது, கிறிஸ்துவுக்கு முன்பு தன்னைத் தாழ்த்திக்கொள்ள மனதில்லாதிருப்பது இப்படிப்பட்ட காரியங்களிலிருந்து மனந்திரும்ப பரிசுத்த ஆவியானவர் உதவி செய்யும் படி ஜெபிப்போம்.

73. கர்த்தருடைய பிள்ளைகள் ஆகாத சம்பாஷனை நல்லொழுக்கத்தைக் கெடுக்கும் என்ற வேத வசனத்துக்குப் பயந்து தேவையில்லாத இடங்களில் உட்கார்ந்து கொண்டு மற்றவர்களைக் குறித்து புறணி பேசுவதிலிருந்து விலகிக்கொள்ள பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்யும் படி ஜெபிப்போம்.

74. இரட்சிக்கப்பட்ட பின்பு, இரட்சிப்பின் விடுதலையை மகிழ்ச்சியோடு அனுபவிக்கக்கூடாதபடிக்கு மனதிலும், குடும்பத்திலும் சமாதானத்தைக் கெடுக்கிற ஜென்ம சுபாவ ஆவிகள் தேவ பிள்ளைகளின் வாழ்க்கையிலிருந்து விலகி பாதாளத்துக்குப் போகும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

75. வட மாநிலங்களில் பணி செய்கிற சுவிஷேச பணியாளர்களுக்கு விரோதமாக போராடுகிற தீய ஆவிகள், இயேசுவின் நாமத்தில் கட்டப்பட்டு செயலிழந்து போகவும், தேவன் தம்முடைய ஊழியக்காரர்களையும் அவர்களின் குடும்பங்களையும் தேவதூதர்களைக் கொண்டு பாதுகாக்கும்படி ஜெபிப்போம்.

76. தேவ ஊழியர்களுக்கு மற்றும் தேவ பிள்ளைகளுக்கு விரோதமாக மந்திரவாதிகளால் ஏவப்படுகிற பில்லி சூனிய மந்திரங்கள் செயல்படாமல் பாதாளத்துக்குப் போகும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

77. புதிதாக இரட்சிக்கப்பட்டு சபைக்கு வரும் விசுவாசிகளை அவர்களின் முன்னோர்கள் வணங்கி வந்த ஆவிகள், குடும்பங்களில் சமாதான குறைச்சல்களையும், தொழில், வியாபாரங்களில் நஷ்டங்களையும் கொண்டு வரும் தீய ஆவிகள் இயேசுவின் நாமத்தில் பாதாளத்துக்குப் போக கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

78. கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷ ஊழியங்களைப் பெற்றுக்

கொண்டவர்கள், அதை நிறைவேற்றி முடிக்க அவர்கள் மேல் அதிகமான கிருபையையும், வல்லமையையும், கிறிஸ்துவின் அன்பையும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றும்படி ஜெபிப்போம்.

79. கோணலும் மாறுபாடும் உள்ள இந்த உலகில் கர்த்தருடைய பிள்ளைகள் குற்றமற்றவர்களாய் வாழ்ந்து, படிக்கிற இடத்திலும், வேலை செய்கிற இடத்திலும், குடும்பத்திலும் இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்தும்படியாக ஜெபிப்போம்.

80. எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தில் நிலைத்திருந்து இந்த உலகத்தில் வெற்றியுள்ள வாழ்வை வாழ்ந்து முடிக்க, கெத்சமனே தோட்டத்தில் இயேசுவை பெலப்படுத்தின தேவன்

கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொரு வரையும் பெலப்படுத்தும்படியாய் ஜெபிப்போம்.

81. தவறான பழக்கங்கள் கொண்ட நபர்களின் ஐக்கியத்திலிருந்து விலகி, கர்த்தருடைய பிள்ளைகள் தங்களை காத்துக்கொள்ள கிறிஸ்துவைச் சார்ந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் படி ஜெபிப்போம்.

82. வாலிப நாட்களில் ஆண், பெண் இருபாலருக்கும் காதல் என்கிற மாயை வலையைச் சாத்தான் விரிக்கிறான் என்று விழிப்படைந்து, இந்த வலையில் சிக்காதபடி தங்களைக் காத்துக்கொள்ள கிறிஸ்துவின் சிலுவையினடியில் வர ஜெபிப்போம்.

83. பச்சிளங்குழந்தைகளைத் திருடி விற்பனைச் செய்கிற நபர்கள் இப்படிப்பட்ட பாவ காரியங்களைச்

செய்யக் கூடாது என்கிற உணர்வுகளை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு கொடுக்கும்படியாகவும், உன்னைப் போல் பிறரையும் நேசி என்கிற வேத வசனத்தின் படி தங்கள் பிள்ளை களையும், தங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளையும் நினைவு கூர்ந்து மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

84. வழிப்பறி, கொள்ளை செய்கிறவர்கள் இது தவறு என்று மனந்திரும்பி, உழைத்து சம்பாதிக்க வேண்டும் என்கிற உணர்வை பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு கொடுக்கவும், அவர்கள் இரட்சிக்கப் படவும் அவர்களின் பிழைப்புக்கு வேறு வழிகளைக் காண்பித்து வியாபாரம், சிறுதொழில் (அல்லது)

ஏதாவது நல்ல வேலை கிடைக்கக் கர்த்தர் கிருபை செய்யும்படி ஜெபிப்போம்.

85. உலக மயக்கத்தில் இருக்கும் தேவ ஜனங்கள் மயக்கந் தெளிந்து இரட்சிக்கப்பட்டதின் நோக்கம் எதற்கு என்பதை உணர்ந்து, தேவ சித்தம் முழுமையாக கிறிஸ்துவில் நிறைவேற்ற அர்ப்பணிக்கும்படி, பரிசுத்த ஆவியானவர் அவர்களை நடத்தும்படி ஜெபிப்போம்.

86. கர்த்தருடைய பிள்ளைகளின் நிலம், பொருள், வீடு மற்றும் அவர்களின் மற்ற உடமைகளை எடுத்துக் கொள்ள முயற்சி செய்கிறவர்கள் பிறருடைய பொருள்களை இச்சியாதிருப்பாயாக என்ற தேவ கட்டளையின் படி அது சாபத்தைக் கொண்டு வரும் என்பதை அறியும்படி பரிசுத்த ஆவியானவர்

உணர்த்தும்படியும், அவர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

87. கர்த்தருடைய பிள்ளைகளின் தொழில், வியாபாரம், குடும்ப சமாதானம், படிப்பு, வேலைகள் இவைகளுக்கு விரோதமாக ஏவல், மந்திரம், சூனியம் வைக்கிறவர்கள் மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கும்படியாகவும், இந்தக் கல்லின் மேல் மோதுகிறவன் நொறுங்கிப் போவான் என்ற வேத வசனத்தைப் படித்தறிய பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு உதவி செய்யும்படி ஜெபிப்போம்.

88. கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கு ஒருவர் உண்மையுள்ளவர்களாய் இருக்கவும், நம்பிக்கைத் துரோகம் செய்யாமலும், நாம் கர்த்தருடைய

கண்களுக்கு முன்பாக இருக்கிறோம் என்பதை உணர்ந்து ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கும்படி ஜெபிப்போம்.

89. தேவனுடைய ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் கர்த்தருடைய வருகையில் கைவிடப்படாதபடி எப்பொழுதும் விழித்திருந்து ஜெபிக்கும் படியும், எப்பொழுதும் ஆயத்தமா யிருக்கும்படியும், இப்பொழுது உலகத்தில் நடக்கும் சம்பவமான காற்று, மழை, வெப்பம், பூமி அதிர்ச்சி மற்றும் பாவங்கள் பெருகி வருகிற சம்பவங்கள் இயேசுவின் வருகையை வெளிப்படுத்துகிறதை அறிந்து ஆயத்தத்துடன் இருக்க ஜெபிப்போம்.

90. தேவனின் சிருஷ்டிப்பாகிய மனிதர்கள் முதற்கொண்டு வான சேனைகளாகிய சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மேலும், நீர், நெருப்பு, காற்று, மற்றும்

சகல சிருஷ்டிப்பின் மேலும் இயேசுவின் இரத்தத்தைத் தெளித்து, இவைகள் மேல் இருக்கும் சாத்தானின் ஆளுகைப் பாதாளத்திற்குப் போகும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

91. இயற்கை பேரழிவுகளிலிருந்தும், இன, மத கலவரங்களிலிருந்தும் தேவனுடைய பிள்ளைகளின் உயிர்களும், உடமைகளும் பாதுகாக்கப்படும்படி தேவனிடம் ஜெபிப்போம்.

92. தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் வரும் உபத்திரவங்கள், போராட்டங்களின் வேளைகளில் கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு ஜெபிக்கவும், இப்படிப்பட்ட வேளைகளில் தேவ சமாதானத்தினால் கர்த்தர் அவர்களின் இருதயத்தை நிரப்பவும் ஜெபிப்போம்.

93. தேவபிள்ளைகள் மனிதர்களைச் சார்ந்து கொண்டு, தேவன் வைத்திருக்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாதபடி போராடுகிற ஏமாற்றுகிற ஆவிகள் கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ் வாதாரங்களிலிருந்து விலகும்படி இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுத்து ஜெபிப்போம்.

94. கர்த்தருடைய பிள்ளைகள் படித்து முடித்துவிட்டு வேலைக்காக காத்திருக்கிறவர்களுக்குக் கர்த்தர் சரியான பாதைகளைக் காட்டி பணிகளைப் பெற்றுக்கொள்ளும்படி ஜெபிப்போம்.

95. குற்றச் செயல்களைச் செய்து நெடு நாட்களாய் சிறைச்சாலையில் இருப்பவர்கள் மனந்திரும்பி, செய்த பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட

இயேசுவிடம் வரவும், அவர்கள் இரட்சிக்கப்பட்டு இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்படி ஜெபிப்போம்.

96. தாங்கள் விட்டு வந்த பழைய அசுத்த எண்ணங்கள், அசுத்த கிரியைகள், சண்டைகள், பொறாமைகள், சமாதான குறைச்சல்கள், தேவனுடையபிள்ளை களை மீண்டும் மேற்கொள்ளாதபடி பரிசுத்த ஆவியானவர் அவர்களை சிலுவையண்டை நடத்த ஜெபிப்போம்.

97. சுவிசேஷம் அறிவிக்கக் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், உலக இச்சைகளின்படி புசிப்போம் குடிப்போம், உட்கார்ந்து விளையாடு வோம் என்ற வார்த்தையின்படி, பிசாசுகளின் தந்திரங்களில் சிக்கிக் கொள்ளாதபடி, ஜெபிக்கும் பிள்ளை களின் ஐக்கியத்தில் சார்ந்து கொண்டு

தேவன் அழைத்த அழைப்பில் உறுதியாய் நிற்க ஜெபிப்போம்.

98. நெருக்கமான காலங்களில் தேவனுடைய பிள்ளைகள் மனுஷருடைய ஆலோசனையில் நடவாதபடி கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்திருந்து, ஆவியானவரின் நடத்துதலைப் பெற்றுக் கொண்டு விடுதலை பெற்றுக் கொள்ள ஒப்புக்கொடுத்து ஜெபிப்போம்.

99. சபை நிர்வாகங்களில் உறுப்பினர்களாயிருப்பவர்கள் தேவனுடைய காணிக்கைப் பணங்களில் தவறு செய்தால், உண்மையுள்ளவர்களாய் இருக்கும்படி பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் குறித்தும் அதனால் வரும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும்போது மனந்திரும்பவும், மீண்டும் அந்த தவறை செய்யாதபடி அவர்களைக் காக்கவும்

கிறிஸ்துவிடம் ஒப்புக் கொடுத்து ஜெபிப்போம்.

100. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமும், வரங்களும் வேண்டும் என்று ஜெபிப்பவர்களுக்கு, கடைசிக் கால எழுப்புதலுக்குரிய இரட்டிப்பான அபிஷேகத்தைக் கொடுத்து, அசுத்த ஆவிகளை விரட்டவும், நோய்களைக் குணமாக்கவும், பில்லி சூனிய வல்லமையை அழிக்கவும், பிசாசின் சகல வல்லமையையும் எதிர்க்க, அவைகளின் மேல் ஆளுகையை ஆவியானவர் கொடுக்கும்படி ஜெபிப்போம்.

★ ★ ★